செ.வெ.எண்: 03 நாள்: 01.07.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் மருத்துவ அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் பொது சுகாதாரத்துறையின் சார்பில் மருத்துவ அலுவலர்கள், உயர்வரிசை பிறப்பு விகிதம் குறித்த ஆய்வுக் கூட்டம் மற்றும் சீமாங் சென்டர் ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் (30.06.2016) அன்று நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:-



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் பொது சுகாதாரத்துறையின் சார்பில் மருத்துவ அலுவலர்கள், உயர்வரிசை பிறப்பு விகிதம் குறித்த ஆய்வுக் கூட்டம் மற்றும் சீமாங் சென்டர் ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நமது மாவட்டத்தில் பொது சுகாதாரத்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து ஒவ்வொரு மாதமும் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் சுகாதாரத்துறையின் மூலம் ஜுன் மாத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் சீமாங் சென்டர்களில் சேவைகள் மற்றும் முன்னேற்றம் குறித்தும் மருத்துவ வட்டாரங்களில் அதிக உயர் வரிசை பிறப்பு விகிதம் குறித்தும் சுகாதார திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் சிகிச்சை மேற்கொண்ட நோயாளிகளின் விபரம் ஆகியவை குறித்து கேட்டறிந்து ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரசவித்த தாய்மார்களின் எண்ணிக்கை விபரம், விண்ணப்பம் பெறப்பட்டவர்களின் எண்ணிக்கை விபரம், **NICU** பச்சிளங்குழந்தை தீவிர சிகிச்சை பிரிவு விபரம், நோயாளர் நலச்சங்கம், இரத்த வங்கி செயல்பாடு போன்ற பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின் போது மருத்துவ அலுவலர்கள் தங்களது பணிநேரத்தை முறையாக கடைப்பிடிப்பதுடன், பணிநேரத்தில் பணிபுரியும் இடத்தில் பணியில் இருக்கவும் உயர் வரிசை பிறப்பு விகிதத்தை குறைக்க நடவடிக்கை மேற்கொள்வதுடன். இது தொடர்பாக மருத்துவ அலுவலர்கள் அந்தந்த மருத்துவமனைகளில் தொடர்கூட்டங்கள் நடத்தவேண்டும், சிசு மரணம் மற்றும் பிரசவ மரணங்கள் நிகழா வண்ணம் அங்கன்வாடி பணியாளர்கள் பணியாற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடைபெறும் பிரசவங்களின் எண்ணிக்கை அதிகரிக்க மருத்துவர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்த ஆய்வின் போது இணை இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்(பொ) மரு.சையது மொய்தீன், துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் புதுக்கோட்டை மரு. அர்ஜீன்குமார் மற்றும் மருத்துவர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**